1973 ஆகஸ்ட் 13]

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: அதிலே என்ன தாமதம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் யார் வேண்டு மென்றாலும் தீர்மானம் கொடுக்கலாம்.

(7) தீர்மானம்.

உறுப்பினர் திரு. மு. சி. ஆ. இரத்தினசாமித் தேவர் வருகை யின்மைக்கு அனுமதி அளித்தல்குறித்து.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளில் 15-வது விதியின்கீழ் திரு. மு. சி. ஆ. இரத்தின சாமித் தேவர், எம்.எல்.ஏ. அவர்கள் வருகையின்மைக்கு 1—4—1973-ல் இருந்து ஆறு மாத காலத்திற்கு பேரவை அனுமதி அளிக்குமாறு கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(6) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(அ) கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பலர் கொடுத் திருந்தும், ஒரு சிலருக்கே அவற்றைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுவது குறித்து—(தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் நெசவாளர் பிரச்சினை பற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். பல்வேறு பொருள் பற்றி உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். சில, சில காரணங்களால் தள்ளப் பட்டிருக்கின்றன. ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இருக்கிறது. அது இந்தப் பொருள் பற்றியது அல்ல. நெசவாளர் பிரச்சினைபற்றி எந்தவிதமான கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் திருமதி அனந்த நாயகி அம்மையார் அவர்கள் கொடுக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.